செ.வெ.எண்: 06/ஏப்ரல் நாள்: 05.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பதற்றமான வாக்குச்சாவடி மையங்களை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் இன்று (05.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில், இராமநாதபுரம் ராஜா உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 வாக்குச்சாவடி மையங்களிலும், தொடர்ந்து ராஜா தினகரன் ஆர்.சி. உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 வாக்குச்சாவடி மையங்களிலும், செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 3 வாக்குச்சாவடி மையங்களிலும், கொழும்பு ஆலிம் நினைவு உயர்நிலைப்பள்ளி வளாகத்திலுள்ள 2 வாக்குச்சாவடி மையங்களிலும், வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி வளாகத்திலுள்ள 2 வாக்குச்சாவடி மையங்களிலும், வாலாந்தரவை ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 3 வாக்குச்சாவடி மையங்களிலும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட வசதிகளை ஆய்வு செய்தார்கள். மேலும் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களித்திட ஏதுவாக, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும் பதற்றமான வாக்குச்சாவடியாக கண்டறியப்பட்டுள்ள வாலாந்தரவை ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடி, வாக்குப்பதிவின் போது வாக்காளர்களுக்கு இடையூறு செய்தல், வாக்காளர்களை சுயமாக வாக்களிக்க விடாமல் தடைசெய்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து தயங்காமல் புகார் தெரித்திட வேண்டும் எனவும், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 அமைதியான முறையில் நடத்திட ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்கள்.

இந்த ஆய்வின் போது உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.சிராஜுதின், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட காவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**